Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

மலர் Volume : 01 | இதழ் Issue : 73 | திங்கள் Monday | 12.01.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

## இலங்கை அரசமைப்பு சீர்திருத்தங்களால் பிரச்சினை:

# தமிழர்கள் உரிமைகளை பாதுகாக்க உடனடி நடவடிக்கை தேவை

## பிரதமர் மோடிக்கு, முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம்



சென்னை:

இலங்கையில்கொண்டு வரப்படும் அரசியலமைப்புச் சீர்த்திருத்தங்களால், இலங்கை தமிழ்ச் சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு, இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப்பாதுகாத்திட உரிய தூ தரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என பிரதமர் மோ டிக்கு முதல்வர் ஸ்டா லின் கடிதம் எழுதியுள்ளார்.

இ து குறித்து அவர் எழுதியுள்ள கடிதத்தில், "ஆழமான வரலாற்று, கலாச்சார மற்றும் உணர்வுப் பூர்வமான பிணைப்புகளின் காரணமாக, இலங்கையில் உள்ள தமிழர்களின் உரிமைகளையும், எண்ணங்களையும் நிலைநிறுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது.தமிழ்நாட்டின் முதல்வர் என்ற முறையில், இந்தியா மற்றும் இலங்கையில் உள்ள மரியாதைக்குரிய தமிழ்த் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், இலங்கையில் முன்மொழியப்பட்ட புதிய அரசியலமைப்பு தொடர்பான பிரச்சினை குறித்து பிரதமர் மோடியின் மேலான கவனத்திற்குக் கொண்டுவருவது எனது கடமை.

இலங்கையில் தற்போது நடைபெற்றுவரும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களால் இலங்கைத் தமிழ்ச்சமூகத்திற்கு ஏற்படும் கடுமையான பாதிப்புகளை எடுத்துரைக்கும் விரிவான கோரிக்கைகளை நான் பெற்றுள்ளேன்.

இலங்கைத் தமிழர்கள் 77 ஆண்டுகளுக்கும் மேலாக, திட்டமிட்ட பாகுபாடு, வன்முறை மற்றும் அவர்களின் உண்மையான உரிமைகளைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளைச் சகித்து வந்துள்ளனர். பலர், இதனை தங்கள் சமூகத்துக்கு எதிரான இனப்படுகொலை என்று விவரிக்கும் ஒரு நிலைக்கு வழிவகுத்துள்ளது.

சுதந்திரத்திற்குப் பிந்தைய இலங்கையின் அரசியலமைப்புகள் (1947, 1972, மற்றும் 1978 ஆம் ஆண்டுகளின் அரசியலமைப்புகள் ) அனைத்தும் ஒரு ஒற்றையாட்சி அரசுக் கட்டமைப்பில் வேரூன்றியிருந்தன. இது திட்டமிட்ட இன வன்முறை, கட்டமைப்பு ரீதியான ஒடுக்குமுறை மற்றும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மறுப்பதற்கு வழிவகுத்தது.

உள்நாட்டுப் போர் முடிவடைந்த கடந்த 16 ஆண்டுகளாக, இந்த ஒற்றையாட்சிக் கட்டமைப்பு, பாரம்பரியமாக தமிழர்கள் வாழ்ந்து வந்த பகுதிகளில் மக்கள் தொகைமாற்றங்கள்,நில அபகரிப்புகள் மற்றும் தமிழ் அடையாளத்தின் சிதைவு ஆகியவற்றிற்கு தொடர்ந்து வழிவகுத்து வருகிறது.

அதிபர் அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான, நாடாளுமன்றத்தில் முழுப்பெரும்பான்மையைக் கொண்ட தற்போதைய இலங்கை அரசாங்கம், இனப்பிரச்சினைகளைத் தீர்க்கும் போர்வையில் ஒரு புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தும் முயற்சிகளைத் துரிதப்படுத்தி வருகிறது. இந்த முன்மொழியப்பட்ட கட்டமைப்பு மீண்டும் ஒரு ஒற்றையாட்சி "எக்கியராஜ்ய" (ஒற்றையாட்சி அரசு) மாதிரியை வலுப்படுத்துவதாகத் தெரிகிறது.

இது அரசியல் சுயாட்சிக்கான தமிழர்களின் நியாயமான எண்ணங்களைப் புறக்கணித்து, அதன்மூலம் அவர்களை மேலும் ஓரங்கட்டி, அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளது. இந்தச் சூழலில், இந்திய அரசால் பூட்டானில் ஏற்பாடு செய்யப்பட்ட 1985 அமைதிப் பேச்சுவார்த்தைகளின் போது, தமிழ் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட திம்பு கோட்பாடுகளில் (Thimpu Principles) குறிப்பிடப்பட்ட கோட்பாடுகளையே, தற்போது பெறப்பட்டுள்ள கோரிக்கைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில், இலங்கைத் தமிழர்களுக்கான ஒரு தனித்துவமான தேசத்தை அங்கீகரித்தல் (தமிழர் தேசியம்)* வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைத் தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகமாக ஏற்றுக்கொள்வது (தமிழர் தாயகம்)

* தமிழ் தேசத்திற்கான தன்னாட்சி உரிமையை உறுதிப்படுத்துதல் (தமிழர் தன்னாட்சி உரிமை)

* மலையகத் தமிழர்களுக்கான முழு குடியுரிமை உரிமைகள் உட்பட, அனைத்து குடிமக்களுக்கும் சமத்துவத்தையும், பாகுபாடின்மையையும் உறுதிசெய்யும் ஒரு கூட்டாட்சி ஆட்சி முறையை நிறுவுதல் போன்றவற்றையே இந்தக் கோட்பாடுகள் வலியுறுத்துகின்றன.

இந்தக் கூறுகளை உள்ளடக்காமல் கொண்டுவரப்படும் எந்தவொரு புதிய அரசியலமைப்பும், அநீதி மற்றும் நிலையற்ற தன்மை தொடர வழிவகுக்கும், இது மீண்டும் மோதல்களுக்கும், மனிதாபிமான நெருக்கடிகளுக்கும் வழிவகுக்கும் அபாயத்தை ஏற்படுத்தும்.

1987 ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் உட்பட, வரலாற்று ரீதியாக இலங்கையுடன் கொண்டுள்ள நட்புறவின் காரணமாக இலங்கையில் அமைதி மற்றும் நீதிக்காக நீண்டகாலமாக அர்ப்பணிப்புடன் செயல்படவேண்டிய தார்மீகக் கடமையை இந்தியா கொண்டுள்ளது. இலங்கைத் தமிழர்களின் அவல நிலை, தமிழ்நாட்டில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

லட்சக்கணக்கான மக்கள், அங்குள்ளவர்களைத் தங்கள் உறவினர்களாகக் கருதுகின்றனர். இலங்கையில் வாழும் தமிழர்களின் நிலைமையில் ஏற்படும் எந்தவொரு சரிவும் இருதரப்பு உறவுகளுக்கும்,


இரு நாடுகளுக்கிடையேயான உறுதிப்பாட்டிற்கும் பெரிய அளவில் தாக்கங்களை ஏற்படுத்தும்.

இந்தச் சூழ்நிலையில், தமிழ் மக்களின் குறைகளை உண்மையாக நிவர்த்தி செய்யும் ஒரு அரசியலமைப்புச் செயல்முறையினைக் கொண்டுவருவதற்கு, இந்திய அரசாங்கம் இலங்கை அதிகாரிகளுடன் உயர்மட்ட அளவில் தூதரக நடவடிக்கைகள மேற்கொள்ள வேண்டும்.

மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் செய்யும்; இனச் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கும்; மற்றும் பன்முகத்தன்மை, சமத்துவக் கோட்பாடுகளை நிலைநிறுத்தும் கூட்டாட்சி முறையை உருவாக்குவதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும். இத்தகைய அணுகுமுறை, பிராந்திய அமைதிக்கு உத்தரவாதம் அளிக்கும் இந்தியாவின் பங்கை மதிப்பது மட்டுமல்லாமல், கூட்டாட்சி மற்றும் மொழி மற்றும் இனச் சிறுபான்மையினரைப் பாதுகாப்பது குறித்த நமது அரசியலமைப்பு விழுமியங்களுடனும் ஒத்துப்போகும்.

அந்த வகையில், பிரதமர் மோடி தலைமையின் கீழ், இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க இந்தியா முனைப்பான நடவடிக்கைகளை எடுக்கும். ஒரு நியாயமான மற்றும் நீடித்ததீர்வுக்கு அது பங்களிக்கும் என உறுதியாக நம்புகிறேன். இவ்வாறு கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# அ.தி.மு.க.வுடனான அன்புமணி கூட்டணி சட்டவிரோதமானது; தேர்தல் ஆணையத்துக்கு பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் கடிதம்



சென்னை:

பாமக பெயரை சட்டவிரோதமாக பயன்படுத்தும் அன்புமணி மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திற்கு பாமக நிறுவனர் ராமதாஸ் கடிதம் எழுதியுள்ளார்.

பாமகவில் தந்தை ராமதாஸ் – மகன் அன்புமணி இடையேயான மோதல் நாளுக்கு நாள் வலுத்து வருகிறது. இதனால்,இரு அணிகளாக பாமகவில் செயல்பட்டு வருகின்றனர். இந்த சூழலில், அதிமுக கூட்டணியில் அன்புமணி தரப்புபாமகஇணைந்துவிட்டது.

இதனால், அதிர்ச்சியடைந்த ராமதாஸ் வேறு எந்த கட்சியுடன் கூட்டணியில் சேரலாம் என்று ஆலோசனை நடத்தி வருகிறார் மேலும், திமுக ஆட்சியை பகழ்ந்தும் பேசி வருகிறார்.

இந்த நிலையில், தேர்தல் கூட்டணி தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த அன்புமணிக்கு உரிமைக்கு இல்லை எனக் கூறி தேர்தல் ஆணையத்திற்கு பாமக நிறுவனர் ராமதாஸ் கடிதம் எழுதியுள்ளார். அன்புமணி மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அவரது கடிதத்தில் பாமக பெயரை சட்டவிரோதமாக பயன்படுத்தும் அன்புமணி மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும். பாமக தலைவர் என அன்புமணி உரிமை கோர முடியாது தேர்தல் கூட்டணி தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த அன்புமணிக்கு உரிமைக்கு இல்லை. எனக்கு மட்டுமே உரிமை உள்ளது. அதிமுகவுடன் கூட்டணி குறித்து அன்புமணி பேச்சுவார்த்தை நடத்தியது சட்டவிரோதமானது.

அவரது செயல்பாடு பாமகவின் அமைப்பு சட்டத்தின்படி அங்கீகரிக்கப்படவில்லை தேர்தல் ஆணையத்திற்குஎதிராகமோசடி செயல்களில் ஈடுபட்டு தலைவர் பதவி காலத்தைஅன்புமணி நீட்டித்துக் கொண்டார்.அன்புமணி கட்சித் தலைவராக இருந்த போது தேர்தலில் தோல்வி அடைந்ததால் பாமக அங்கீகாரத்தை இழந்தது. அன்புமணியை பாமக தலைவராக நீட்டித்ததற்கு எதிரான வழக்கு டில்லி ஐகோர்ட்டில் நிலுவையில் இருக்கிறது. கடந்த ஆண்டு டிசம்பர் 17ம் தேதி நான் பாமக தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன் அனுமதியின்றி பாமக பெயரை அன்புமணி பயன்படுத்துவது குறித்து தேர்தல் ஆணையம் விளம்பரம் செய்ய வேண்டும். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்தக் கடிதத்தை தேர்தல் ஆணையத்திற்குமட்டுமல்லாது, உள்துறை செயலர் மற்றும் தமிழக டிஜிபிக்கும்ராமதாஸ் அனுப்பியுள்ளார்.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில்**

**இணையுங்கள்**

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/

CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## கரூர் சம்பவம் சிபிஐ விசாரணை:

# டெல்லி செல்கிறார் தவெக தலைவர் விஜய்



சென்னை,

கரூரில் கடந்த செப்டம்பர் 27-ந்தேதி விஜய் பிரசாரம் மேற்கொண்டபோது, கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியானார்கள். நெஞ்சை உலுக்கும் இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரிய அதிர்வலையை ஏற்படுத்தியது. இந்த சம்பவம் தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டு மேற்பார்வையில் சி.பி.ஐ. விசாரணை மேற்கொண்டு வருகிறது.

கரூரில் பொதுமக்கள் மற்றும் த.வெ.க. நிர்வாகிகளிடம் சி.பி.ஐ. குழுவினர் விசாரணை நடத்தினர். த.வெ.க. பொது ச்செயலாளர் புஸ்சி ஆனந்த், தேர்தல் மேலாண்மை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜூனா, இணைச் செயலாளர் நிர்மல்குமார், கரூர் மாவட்டச் செயலாளர் உள்ளிட்டோர் ஆஜராகி விளக்கம் அளித்தனர். இதைத் தொடர்ந்து, டெல்லியில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் நடைபெற்ற மூன்று நாள் விசாரணையிலும் அவர்கள் பங்கேற்று ஆதாரங்களை வழங்கினர். விஜய்க்கு சி.பி.ஐ. சம்மன் அனுப்பி, வரும் 12ஆம் தேதி (நாளை) ஆஜராகும்படி உத்தரவிட்டது.

டெல்லியில் நாளை சி.பி.ஐ. அலுவலகத்தில் ஆஜராகும் விஜயிடம், கரூர் சம்பவம் தொடர்பாக பல கிடுக்கிப்பிடி கேள்விகள் கேட்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

விஜயிடம் தொடர்ந்து மூன்று நாட்கள் வரை விசாரணை மேற்கொள்ளப்படலாம் என்ற தகவலும் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சி.பி.ஐ. விசாரணைக்காக நாளை காலை சென்னையிலிருந்து தனி விமானம் மூலம் விஜய் டெல்லி செல்கிறார்.

டெல்லி லோதி எஸ்டேட் சாலையில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் விஜய் ஆஜராக உள்ளார். டெல்லி வரும் விஜய்க்கு பாதுகாப்பு வழங்கக் கோரி த.வெ.க. சார்பில் டெல்லி காவல்துறைக்கு மின்னஞ்சல் அனுப்பப்பட்டுள்ளது.



கோவை கணியூர் பகுதியில் உள்ள பார்க் கல்லூரியில் தமிழர்களின் பாரம்பரிய பொங்கல் திருவிழா மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. கல்லூரி வளாகத்தில் மண் பானையில் பொங்கல் பொங்க, "பொங்கலோ பொங்கல்" என முழக்கமிட்டு மாணவர்கள் சூரிய வழிபாடு செய்தனர். கிராமத்து திருவிழாவை நினைவூட்டும் வகையில் உரியடித்தல், கயிறு இழுத்தல், கும்மி ஆட்டம், ஒயிலாட்டம் உள்ளிட்ட பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு பொங்கல் விழாவிற்கு தனித்துவம் சேர்த்தது. இந்த நிகழ்ச்சியில் பாஜக விளையாட்டுப் பிரிவு மாநில செயலாளரும், கல்லூரியின் தலைமை செயல் அதிகாரியுமான அனுஷா ரவி கலந்துகொண்டு மாணவர்களை ஊக்குவித்தார். குறிப்பாக, கொங்கு மண்ணின் பாரம்பரிய துடும்பு இசை முழங்க, அதற்கேற்றவாறு மாணவ மாணவியர் அனைவரும் உற்சாகமாக நடனமாடிய பொங்கல் விழாவை கொண்டாடி மகிழ்ந்தனர். தமிழர்களின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை பெருமைப்படுத்தும் விதமாக இந்த கொண்டாட்டம் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

## கோவை மாவட்டம் சோமையம்பாளையம் பகுதியில் உள்ள

# ஆர்.ஜி. ஸ்போர்ட்ஸ் அகாடமியில் மாவட்ட அளவிலான கைப்பந்து போட்டிகள் நடைபெற்றது

### பி.எஸ்.ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி சாம்பியன் பெற்று சாதனை




கோவை கணுவாய் அருகே சோமையம்பாளையத்தில் கிராமப்புற கல்வி மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அறக்கட்டளை, ஆர் ஜி ஸ்போர்ட்ஸ் அகாடமியுடன் இணைந்து, கைப்பந்து விளையாட்டில் ஜாம்பவான்களாகத் திகழ்ந்த அமரர் வி சி ராமலிங்கம் மற்றும் அமரர் என் ராஜேந்திரன் ஆகியோரின் நினைவாக, 14 மற்றும் 19 வயதுக்குட்பட்ட சிறுவர் மற்றும் சிறுமிகளுக்கான பள்ளிகளுக்கு இடையே நடத்திய மாவட்ட அளவிலான கைப்பந்துப் போட்டிகளில் 19 வயதிற்குட்பட்டோர் பிரிவில் பி.எஸ்.ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி முதல் இடம் பெற்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

கைப்பந்து விளையாட்டில் ஜாம்பவான்களாகத் திகழ்ந்த அமரர் வி சி ராமலிங்கம் மற்றும் அமரர் என் ராஜேந்திரன் ஆகியோரின் நினைவாக, 14 மற்றும் 19 வயதுக்குட்பட்ட சிறுவர் மற்றும் சிறுமிகளுக்கான பள்ளிகளுக்கு இடையேயான மாவட்ட அளவிலான கைப்பந்துப் போட்டிகளை, கிராமப்புற கல்வி மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அறக்கட்டளை, ஆர் ஜி ஸ்போர்ட்ஸ் அகாடமியுடன் இணைந்து 3 நாட்கள் நடத்தியது.

கோவை கணுவாய் அருகே உள்ள ஆர் ஜி ஸ்போர்ட்ஸ் அகாடமி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் மாவட்டத்தின் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 60 சிறுவர் மற்றும் சிறுமியர் இந்த நாக் அவுட் மற்றும் லீக் போட்டிகளில் பங்கேற்றனர்.

இறுதி நாள் போட்டிகள் லீக் மற்றும் சூப்பர் லீக் முறையில் நடத்தப்பட்டன. இதில் பல்வேறு பள்ளி அணிகள் பங்கேற்று திறமையை வெளிப்படுத்தின.

தொடர்ந்து நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் ஆர்.ஜி. ஸ்போர்ட்ஸ் அகாடமி நிறுவனரும், ஓய்வுபெற்ற வருமான வரித்துறை அதிகாரியுமான எஸ்.ஆர். ஆறுச்சாமி வரவேற்புரை நிகழ்த்தி பரிசுகளை வழங்கினார்.

மேலும் முதன்மை விருந்தினராக ஓய்வுபெற்ற போக்குவரத்துத் துறை துணை ஆணையர் எஸ்.எஸ். வேலுமணி கலந்து கொண்டு, வெற்றி பெற்ற அணிகள் மற்றும் வீரர் - வீராங்கனைகளுக்கு பரிசுகள் வழங்கினார். இதில்

கௌரவ விருந்தினர்களாக, இந்திய வருவாய் சேவை அதிகாரியும் சுங்கம் மற்றும் மத்திய உற்பத்தி வரி துறையின் உதவி ஆணையர் ஓய்வுபெற்ற ஆர். நாராயணசாமி, சோமையம்பாளையம் ஊராட்சி முன்னாள் தலைவர் கே.பி. ரங்கராஜ், தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியின் கிளை மேலாளர் ஆர். ராஜேஷ், சென்னை எஸ்.டி.ஏ.டி. நிறுவனத்தின் துணை பொதுமேலாளர் ஆர். ராஜா மகேந்திரன், இந்திய கடற்படை பயிற்சியாளர் ஜெயபிரகாஷ், சோமசுந்தரம், கிருபாகரன், வருமான வரித்துறை நிர்வாக அலுவலர் ஏ.ஓ., வி.சி.ஆர். பிரகதேஷ், டி.எஸ்.என். மணிகண்டன், வாடவள்ளி காவல் நிலையத்தைச் சேர்ந்த மொஹம்மது மிரான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கோவையில் மாநில அளவிலான கராத்தே போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு




கோவையில், மாநில அளவிலான கராத்தே போட்டிகள், கோவை பெரியநாயக்கன்பாளையம் பகுதியில் உள்ள பயனீர் அறிவியல் கலைக்கல்லூரியில் நடைபெற்றது.

இதில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து 300க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்

இதில் மேட்டுப்பாளையம் ஆலிவ் இஸ்லாமிய இண்டர்நேஷனல் பள்ளி மாணவ மாணவிகள் கட்டா மற்றும் குமித்தே போட்டிகளில் கலந்து கொண்டு பல்வேறு பிரிவுகளில் கலந்து கோண்டு, வெற்றி பெற்றனர். வெற்றி பெற்ற மாணவ மாணவிகளை பள்ளியின் தாளாளர் சையது முஹம்மது, கராத்தே மாஸ்டர் சிஹான் ஜெமிஷா கராத்தே பயிற்சியாளர் முக்தார் மற்றும் பள்ளி ஆசிரியர் ரஜியா சுல்தானா ஆகியோர் பாராட்டினர் என்பது குறிப்பிடத்தக்கது.



# புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளியில் பொங்கல் திருநாள் கொண்டாடப்பட்டது

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள புனித அன்னாள் பள்ளியில் பொங்கல் வைத்து கரும்பு படைத்து கலை விழா கண் கவரும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தலைமை விருந்தினர் சகோ ஜெ. கரோசிலின் நிர்மலா ராணி

கலை நிகழ்ச்சியில் அனைத்து மாணவ மாணவிகளும் கலர் கலர் உடைகளில் ஜொலித்தனர். கலை நிகழ்ச்சியில் காண்பதற்கு பள்ளி மாணவ, மாணவிகளின் பெற்றோர்கள் உறவினர்கள் நண்பர்கள் வந்திருந்து பொங்கல், ஆடல் பாடல் நடனம் மற்றும் மாணவ மாணவிகளுக்கு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சி ஏற்பாடு பள்ளி ஆசிரியர் ஆசிரியைகள் பள்ளி ஊழியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# மதுராந்தகத்தில் இருசக்கர வாகன பழுது நீக்குவோர் நல சங்கம் சார்பில் சமத்துவ பொங்கல் விழா

## மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் பங்கேற்பு



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் இருசக்கர வாகன பழுது நீக்குவோர் நல சங்கம் சார்பில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது.

இந்த விழாவினை மதுராந்தகம் வட்டார இருசக்கர வாகன பழுது நீக்குவோர் நல சங்க தலைவர் மகேஷ் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல், மதுராந்தகம் அதிமுக நகர கழக செயலாளர் பூக்கடை கே. சி. சரவணன், கட்டுமான தொழிலாளர் நல சங்க மாநிலத்தலைவர் குமார் இவர்கள் கலந்து புத்தம் புது பானையில் பச்சரிசி வெல்லம் இவர்களை வைத்து பொங்கல் வைத்து வெகுமசியாக சமத்துவ பொங்கல் விழாவை கொண்டாடினர் அதனை தொடர்ந்து சங்கத்தின் உறுப்பினர்களுடைய பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவ மாணவிகளுக்கு ஊக்கத்தொகை சான்றிதழ் வழங்கப்பட்டது சங்கத்தில் உள்ள 150 மேற்பட்ட உறுப்பினர்களுக்கு பொங்கல் பரிசாக 10 கிலோ அரிசி சர்க்கரை வெள்ளம் கரும்பு பொங்கலுக்கு தேவையான பொருட்கள் அடங்கிய பொங்கல் பையை சங்க உறுப்பினர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் வழங்கி பொங்கல் வாழ்த்து தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் செயலாளர் கண்ணதாசன், பொருளாளர் பச்சையப்பன், துணைச் செயலாளர்கள் புருஷோத்தமன், சின்னசாமி, இளையபெருமாள், சண்முகம் ஏழுமலை, மற்றும் சங்க உறுப்பினர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி பேருந்து நிலையத்தில்

# விபத்தில் கோமா நிலையில் இருந்து மீண்டு வந்த டீ கடைக்காரருக்கு பொருள் உதவிகள் செய்த காங்கிரஸ் கட்சியை சேர்ந்த சுப்பிரமணி



கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி பேருந்து நிலையத்தில் டீ கடை வைத்து பிழைத்து வந்தவர் முனுசாமி. போச்சம்பள்ளி அதன் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த அனைத்து அரசியல் தலைவர்கள் உட்பட கிராம மக்கள் பெரும்பாலானோர் அவரது டீ கடையில் உட்கார்ந்து டீ குடித்துக்கொண்டு அரட்டையடிப்பது வழக்கம். மாவட்டத்தில் உள்ள அரசியல் கட்சி தலைவர்கள் பெரும்பாலானோர் இவரது டீ கடைக்கு வராமல் இருந்தது கிடையாது. அந்தளவுக்கு செல்வமிக்க முனுசாமி கடந்த 2 மாதங்களுக்கு முன்பு வீட்டின் அருகே சாலையை கடக்கும்போது இரு சக்கர வாகனம் மோதிய கீழே விழுந்ததில் தலையில் படுகாயமடைந்து கோமா நிலைக்கு சென்றார். கடந்த இரண்டு மாதங்களாக கோமா நிலையில் இருந்து தற்போது மீண்டு பழைய நிலைமைக்கு திரும்பி வருகிறார். இருப்பினும் டீ கடை நடத்தப்படாத காரணத்தால், அவரது குடும்பம் கடும் வறுமைக்கு தள்ளப்பட்டது. இதனை அறிந்த காங்கிரஸ் கட்சியை சேர்ந்த முன்னால் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தலைவர் சுப்பிரமணி, அவரை வீட்டில் நேரில் சந்தித்து குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியதோடு, அவருக்கு பொருள் உதவிகள் செய்தார். மேலும் அடுத்த இரண்டு மாதத்திற்கு குடும்பத்திற்கு தேவையான அரிசி உள்ளிட்ட பொருட்களை வழங்கினார். கடும் வறுமையில் செய்த உதவியை முனுசாமி குடும்பத்தினர் கண்ணீர் மல்க பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்வில் மாவட்ட பொருளாளர் உமர், முன்னால் மாவட்ட துணை தலைவர் விவேகானந்தன், முன்னால் மாவட்ட துணைதலைவர் சிவலிங்கம், ஊடக பிரவு கணேஷ், பிஆர்எல். ரமேஷ், மடத்தானூர் ஆறுமுகம், முன்னால் மாவட்ட செயலாளர் நவாப், டேனியல் பழனி, உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்

# ஈரோடு மாவட்டம், அதன் சுற்றுப்பகுதியிலும் மாசில்லா போகி பண்டிகை கொண்டாட விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்யவேண்டும்

## கலெக்டர் கந்தசாமி அறிவுரை




ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு-

நமது முன்னோர்கள் பொங்கல் திருநாளுக்கு முன் பழைய கழிதலும், புதியன புகுதலும் என்ற அடிப்படையில் போகிப்பண்டிகையினைக் கொண்டாடி வந்துள்ளனர். இயற்கைப் பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட பழைய பொருட்களை தீயிட்டுக் கொளுத்தி வந்துள்ளனர். இச்செய்கையால் காற்று மாசுபடாமல் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாமல் இருந்து வந்துள்ளது.

ஆனால் இன்றைய சூழலை எடுத்துக்கொண்டால், தற்பொழுது போகிப்பண்டிகையின் பொழுது பழைய பொருட்களான பிளாஸ்டிக், செயற்கை இழைகளால் தயாரிக்கப்பட்ட துணிகள். ரப்பர் பொருட்கள், பழைய டயர் மற்றும் டியூப், காகிதம், இரசாயனம் கலந்த பொருட்கள் போன்றவற்றை எரிப்பதால் காற்று மாசு ஏற்படுவதோடு போகி அன்று எரிக்கப்படும் பொருட்களால் ஏற்படும் அடர்ந்த புகையின் காரணமாக விமானங்கள் வருகை மற்றும் புறப்பாடுகளில் தாமதம் ஏற்படுகிறது. சென்னை நகரில் போகி அன்று எரிக்கப்படும் மேற்படி பொருட்களால் புகை மண்டலம் ஏற்பட்டு வாகன ஓட்டிகளுக்கு மிகுந்த சிரமங்கள் ஏற்படுவதோடு விபத்துகளுக்கும் காரணமாக உள்ளது. பழைய பிளாஸ்டிக் பொருட்கள், டயர் மற்றும் டியூப் போன்றவற்றை எரிப்பதால் வெளிப்படும் நச்சு வாயுக்களால் மூச்சு திணறல், கண் எரிச்சல் போன்ற நோய்களால் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது.

இத்தகைய செயல்கள் பொது மக்களிடம் விழிப்புணர்வு இல்லாமையால் ஏற்பட்டு வந்தது. இதனை தவிர்க்க, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கடந்த 21 ஆண்டுகளாக போகிப்பண்டிகைக்கு முன் பொதுமக்களிடைய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றது. இதன் காரணமாக கடந்த வருடங்களில் பழைய ரப்பர் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் டயர், டியூப் போன்றவற்றை எரிப்பது பெரும்பாலும் குறைந்துள்ளது.

இந்த 2026 ஆம் ஆண்டும் சுற்றுச்சூழல் மாசு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில், ஈரோடு மாவட்டம் மற்றும் அதன் சுற்றுப்பகுதியிலும் விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, இவ்வருடம் பொதுமக்கள் அனைவரும் பிளாஸ்டிக், டயர், ட்யூப் போன்றவற்றை எரிக்காமல் சுற்றுச்சுழலைப் பாதுகாக்கும் வகையில் போகிப்பண்டிகையைக் கொண்டாடுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் ஸ்ரீ சாரதா ஆசிரமத்தில் விவேகானந்தா சேவா பிரதிஷ்டன் சார்பில் பொங்கல் பண்டிகையையொட்டி நகராட்சி தூய்மை பணியாளர்கள் மற்றும் நகராட்சி ஊழியர்களுக்கு புத்தாடைகள் வழங்கும் நிகழ்ச்சி நகர மன்ற தலைவர் திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண்ணன் விவேகானந்த சேவா பிரதேஷ் தான் இயக்குனர் யத்தீஸ்வரி ஆத்ம விகாச பிரியா அம்பா ஆகியோர் கலந்து கொண்டு 120 தூய்மை பணியாளர்கள் மற்றும் நகராட்சி ஊழியர்களுக்கு குத்தாடைகளை வழங்கினர் இதில் நகராட்சி ஆணையர் புஸ்ராமற்றும்நகரமன்றதுணைத்தலைவர்வைத்தியநாதன் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் டேனியல் ராஜ் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் நகராட்சி அலுவலர்கள் தூய்மை பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையத்தில் போக்குவரத்து துறை சார்பில்

# சாலை பாதுகாப்பு மாத விழாவையொட்டி எமதர்மன் வேடமிட்ட கலைஞர்கள் மூலம் கலை நிகழ்ச்சி நடத்தி விழிப்புணர்வு




கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையத்தில் போக்குவரத்து துறையின் சார்பில் சாலை பாதுகாப்பு மாத விழா நடைபெற்றது வட்டார போக்குவரத்து அலுவலர் நெடுஞ்செழிய பாண்டியன் தலைமையில் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது அப்பொழுது அந்தவழியே ஒரு இருசக்கர வாகனத்தில் மூன்று பேர் சென்றனர் அவர்களை வழிமறித்து தடுத்து நிறுத்தி தலைக்கவசம் அணிவதன் முக்கிய குறித்தும் மூன்று பேர் இருசக்கர வாகனத்தில் ஆபத்தான முறையில் பயணம் செய்வதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், பாசகயிற்றை அவர்கள் மேல் போட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தினர். மேலும் தலைக்கவசம் அணியாமல் அதிவேகமாக செல்லும்பொழுது விபத்துகள் ஏற்பட்டால் பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தின் நிலை எவ்வாறு இருக்கும் என்பது குறித்து விளக்கமாக கருத்துரை வழங்கினர் இதில் மோட்டார் வாகன ஆய்வாளர் மீனா குமாரி, போக்குவரத்து காவல் ஆய்வாளர் முத்துக்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டு போக்குவரத்து விதிமுறைமீறி இயக்கப்பட்ட வாகனங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு விழிப்புணர்வு வாசகங்கள் அச்சிடப்பட்ட துண்டு பிரசுரங்கள் வாகன ஓட்டிகளுக்கு வழங்கப்பட்டது...



ஈரோடு தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் சுதந்திர போராட்ட தியாகி குமரன் நினைவு நாளை முன்னிட்டு சிவகிரியில் உள்ள திருவருவ சிலைக்கு மாவட்ட தலைவர் மக்கள் ஜி ராஜன் தலைமையில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.எம். பழனிச்சாமி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் வட்டார தலைவர்கள் கொடுமுடி மேற்கு டிஸ்கோ முருகேஷ், கொடுமுடி கிழக்கு கோபாலகிருஷ்ணன், மொடக்குறிச்சிகிழக்குகதிர்வேல், மொடக்குறிச்சி தெற்கு ஈஸ்வரமூர்த்தி, பேரூர்தலைவர் கணேஷ்ராம், பாலு உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# கடலூரில் மக்கள் உரிமை மீட்பு மாநாடு 2.0 காஞ்சிபுரம் மாவட்டம் சார்பில் 15 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பங்கேற்பு



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் அருகே உள்ள ஆத்தூர் சுங்கச்சாவடியில் காஞ்சிபுரம் மாவட்டத்தின் சார்பில் உத்திரமேரூர், மதுராந்தகம்,தொகுதியில் உள்ள தேமுதிக நிர்வாகிகள் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் ஆலோசனைப்படி காஞ்சிபுரம் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் எம்.ராஜேந்திரன் தலைமையில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மக்கள் உரிமைமீட்புமாநாடு என்பது தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தலை அனைத்து கட்சியும் திரும்பி பார்க்கும் அளவிற்கு மாநாடு இருக்கும் மேலும் இந்த மாநாடு எழுச்சி மிகு மாநாடாக இருக்கும் என காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் ராஜேந்திரன் செய்தியாளர் சந்திப்பில் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் லட்சுமணன் மாவட்ட அவைத் தலைவர் வெங்கடேசன் தலைமை செயற்குழு உறுப்பினர் விஜயகுமார் தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஆறுமுகம் ஒன்றிய கழக செயலாளர்கள் வி.சிவகுமார், இ.என்.பெருமாள்,

ரமேஷ், கன்னியப்பன், பிரேம்குமார், ராமலிங்கம், கிருபாகரன், பொன்னுரங்கம், பன்னீர், அச்சிறுப்பாக்கம் பேரூர் கழக செயலாளர் ஜெ.அசாருதீன்,மதுராந்தகம் நகர கழக செயலாளர் சாந்தகுமார், நகர அவை தலைவர் கமல் பேரூராட்சி செயலாளர்கள் பழனிராஜ், பிரபு, ஐயப்பன், உள்ளிட்ட மாவட்ட நகர பேரூர் ஒன்றிய நிர்வாகிகள் என

15 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் மாநாட்டில் பங்கு பெற்றனர்.





தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக மாநில பொதுச் செயலாளர் எம். யுவராஜா ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆலமர தெரு பகுதியில் நேற்று (11.1.2026) பொதுமக்களோடு சேர்ந்து பொங்கலை சிறப்பாக கொண்டாடினார். அது சமயம் சுமார் 500க்கும் மேற்பட்ட ஏழை எளிய மகளிர்க்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்த நிகழ்வில் தமிழ் மாநில காங்கிரஸ் மத்திய மாவட்ட இளைஞரணி துணைத் தலைவர் மாயா வெங்கடேஷ், கொங்கு மண்டல மகளிர் அணி பொதுச் செயலாளர் காந்திமதி, மாவட்ட பொதுச் செயலாளர் சஞ்சய் மற்றும் இளைஞர் அணியைச் சேர்ந்த ராஜராஜன் வேலுச்சாமி, அருண்குமார் ,தனசேகர் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



ஈரோடு மாநகர் மாவட்டம் இந்து அன்னையர் முன்னணி சார்பாக நேற்று வீரப்பன் சத்திரம் சத்தி சாலையில் அமைந்துள்ள ஜனனி திருமண மண்டபத்தில் 3 மணி நேர பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ப. ஜெகதீசன் மாவட்டத்தலைவர் , இந்து அன்னையர் முன்னணி பொறுப்பாளர்கள் த.ஜெயமணி, வெ. பூர்ணிமா மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ப. ரமேஷ், சிறப்பு அழைப்பாளராக வீ.ஜெயபாரதி முழுநேர ஊழியர் கலந்து கொண்டு வழி காட்டினார்.

# கோவை திருச்சி சாலையிர் உள்ள கியா கார் விற்பனை நிலையத்தில் 'ஆல் நியூ' கியா செல்டோஸ் காரை அறிமுகப்படுத்தியது பிரசன்னா கியா கார் விற்பனை நிலையம்

கோவை- திருச்சி சாலை,அவினாசிசாலை, பொள்ளாச்சி, ஊட்டி, திருப்பூர், அவினாசி, ஈரோடு, கரூர் மற்றும் நாமக்கல் உள்ளிட்ட கொங்கு மண்டல பகுதிகளுக்கு முழுமையான சேவையினை வழங்கி வரும் பிரசன்னா கியா நிறுவனம், கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்டோமொபைல் துறையில் தனக்கென்று தனி முத்திரை பதித்துள்ளது. வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு, வாடிக்கையாளர்களால் அதிகம் நம்பப்படும் ரீடெய்ல் வணிக நிறுவனம்" என்ற விருதையும் பெற்றுள்ளது.

கம்பீரமான வடிவமைப்பு, நவீன தொழில்நுட்பம் மற்றும் இந்த பிரிவு கார்களில் முன்னணி பாதுகாப்பு அம்சங்களுடன், பிரிமியம் எஸ்யூவி கார்கள் பிரிவில் புதிய அத்தியாயத்தை உருவாக்கி உள்ளது ஆல்-நியூ கியா செல்டோஸ், சிறப்பான டிரைவிங் அனுபவத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ள இந்த கார் ஆனது செயல்திறன்.

சொகுசான பயணம் மற்றும்புதுமைகள் ஆகியவற்றின் சிறந்த கலவையாக திகழ்கிறது.

ஆல் நியூ கியா செல்டோஸ் சக்திவாய்ந்த மற்றும்எரிபொருள் சிக்கனமான என்ஜின் வகைகளில் கிடைக்கிறது, 1.5 லிட்டர் பெட்ரோல் என்ஜின் - மேனுவல், ஐவிடி மற்றும் டீசிடி டிரான்ஸ்மிஷன் வகைகளில் கிடைக்கிறது.

1.5 லிட்டர் டீசல் என்ஜின் - மேனுவல் மற்றும் ஆட்டோமெட்டிக் டிரான்ஸ்மிஷன் வகைகளில் கிடைக்கிறது.

பெட்ரோல் மாடல்கள் ரூ. 10.99 லட்சம் முதல்டீசல் மாடல்கள்ரூ. 12.59 லட்சம் முதல்பெட்ரோல் மற்றும் டீசல் ஆகிய இரண்டு வகைகளும்



இந்த பட்ஜெட்டில் சிறப்பான மதிப்பை வழங்குவதால், புதிய கியா செல்டோஸ் அதன் பிரிவில்மிகவும்கவர்ச்சிகரமான தேர்வுகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

இந்த வகை கார்களின் பிரிவில் முன்னணிஅம்சங்கள், மேம்பட்ட எடீஎஎஸ் தொழில்நுட்பம், பிரீமியம் உட்புற வடிவமைப்பு மற்றும் சிறந்த ஓட்டுநர் அனுபவம் ஆகியவற்றுடன், செல்டோஸ் அதன் விலை வரம்பில் சிறந்த மதிப்புள்ள எஸ்யுவி-யாக தனித்து நிற்கிறது கொங்கு மண்டலத்தில் உள்ள அனைத்து பிரசன்னாகியாஷோரூம்களிலும் டெஸ்ட் டிரைவ் மற்றும் முன்பதிவுகள் அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டு உள்ளன.

வாடிக்கையாளர்கள் இப்போது ஆல்-நியூ கியா செல்டோஸ் காரினை நேரடியாக ஓட்டிப்பார்த்து வாங்கி மகிழலாம். எதிர்பார்ப்பதை விட உண்மையிலேயே அதிகமான வசதிகளை உள்ளடக்கிய ஒரு பிரீமியம் எஸ்யுவியான புதிய கியா செல்டோஸ் காரினை இயக்கும்அனுபவத்தைபெற்று மகிழ்ந்திட ஆட்டோமொபைல் ஆர்வலர்களையும், மதிப்புமிக்க வாடிக்கையாளர்களையும் அன்புடன் அழைக்கிறது பிரசன்னா கியா ஷோரூம்

# தமிழ்நாடு மனைத் தொழில் செய்வோர் நல சங்கத்தின் தொண்டாமுத்தூர் தொகுதி கிளை புதிய நிர்வாகிகள் அறிமுகம்

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் ரியல் எஸ்டேட் துறையில் பங்கெடுத்து வரும் மனை தொழில் செய்வோரின் நலன்களை செயல்படுத்தும்விதமாக அண்மையில்,தமிழ்நாடு மனைத் தொழில் செய்வோர்நலச்சங்கம்எனும் அமைப்பு துவங்கப்ப ட்டது..

இந்நிலையில் ,தமிழ்நாடு மனைத் தொழில் செய்வோர் நல சங்கத்தின் செயல்பாடுகளை விரிவு படுத்தும் விதமாக ஒவ்வொரு தொகுதியிலும் கிளை அமைப்புகள் துவங்கப்பட்டு வருகின்றன..

இதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு மனைத்தொழில் செய்வோர் நலச்சங்கத்தின் கிளை அமைப்பாக தொண்டாமுத்தூர் தொகுதி அமைப்பு துவங்கப்பட்டது..

இதற்கான துவக்க



விழா மற்றும் தொண்டாமுத்தூர் தொகுதி புதிய நிர்வாகிகள் அறிமுக நிகழ்ச்சி,மற்றும் ஆலோசனை கூட்டம் சுண்டாக்கமுத்தூர் பி.ஆர்.மகால் அரங்கில் நடைபெற்றது..

தொண்டாமுத்தூர் தொகுதி கிளை தலைவர் கௌரி சங்கர்,தலைமையில் நடைபெற்ற விழாவில்பொருளாளர்லட்சுமணன்,செயலாளர் கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்..

முன்னதாக நடைபெற்றமருத்துவமுகாமை விமான நிலையம் ஆலோசனை குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன், கோகுலம் நிறுவன குழும நிர்வாக இயக்குனர் ஆர்.கே.ரவிக்குமார் ,கிரீன் சிட்டி மெடிக்கல் நாராயணன்

தமிழ்நாடு மனைத் தொழில் செய்வோர் நல சங்கத்தின் தலைவர் ராக்கி கிருஷ்ணன் மற்றும் செயல் தலைவர். டாக்டர் ஜி முகமது ரஃபீக் பொதுச்செயலாளர்.ராம வெங்கடேசன்,பொருளாளர் மயிலை செந்தில்குமார்,ஆகியோர் துவக்கி வகித்தனர்...

தொடர்ந்து தொண்டாமுத்தூர் தொகுதி கிளை அமைப்பு புதிய நிர்வாகிகள் மற்றும் மாநில,மாவட்ட நிர்வாகிகள் நியமனம் நடைபெற்றது..

நிகழ்ச்சியில் மாநில நிர்வாகிகள் பேசுகையில்,தமிழகத்தில் ரியல் எஸ்டேட் தொழிலில் ஈடுபட்டு வரும் மனை தொழில் செய்வோருக்கு என தனி நல வாரியம் அமைக்கப்பட வேண்டும் எனவும்,மேலும் தமிழக அரசு மனை தொழில் செய்வோருக்கு தொகுப்பு வீடுகளை வழங்க முன் வர வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்...

இந்நிகழ்ச்சியில் முன்னால் தலைவர் திருமூர்த்தி,கவுன்சிலர்கள் முருகேசன், ராயப்பன்,மற்றும் மகாலிங்கம்,லயன்ஸ்அருள்தாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# கோவையில் ரியம் ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் உயர்தர விளையாட்டு வளாகத்தின் துவக்கவிழா நிகழ்ச்சி நடைபெற்றது

## முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.இராசா ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்

கோவை மாநகரில், சாய்பாபா காலனியில் முன்னணி விளையாட்டு அகாடமியாக இயங்கி வரும் ரியம் ஸ்போர்ட்ஸ், தனது புதிய உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு வளாகத்தைத் துடியலூரில் துவங்கியது.

இதனை, முன்னாள் மத்திய அமைச்சரும், தற்போதைய நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசாரிப்பன் வெட்டி வைத்தார். இந்த விழாவில் ரியம் ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சுவாதி அகர்வால், இணை நிறுவனர் த்ரேதம் அகர்வால் மற்றும் எஸ்.எஸ்.வி.எம் கல்வி நிறுவனங்களின் அறங்காவலர் மோகன்தாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சுமார் 2.5 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த வளாகத்தில், 'பிக்கிள்பால்' விளையாட்டுக்கான தமிழகத்தின் மிகப்பெரிய விளையாட்டுத் தளங்களில் ஒன்று அமெரிக்க ஓபன் போட்டி தரத்திலான தளமாக அமைக்கப்பட்டுள்ளது, கிரிக்கெட் பயிற்சிக்காக ஆஸ்ட்ரோ டர்ஃப் மற்றும் கான்கிரீட் பிட்ச்கள்,துல்லியமான பந்துவீச்சு இயந்திரத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும், விரைவில் ஃபிபா அங்கீகாரம் பெற்ற கால்பந்து மைதானம், ஃபிபா தரத்திலான





கூடைப்பந்து தளம் மற்றும் நவீன கிரிக்கெட் பயிற்சி வசதிகள் இங்கு வரவுள்ளது

இந்த மையம் ஒரு விளையாட்டுப் பயிற்சி அகாடமியாகச் செயல்படுவதோடு மட்டுமல்லாமல், பல்வேறு விளையாட்டுகளின் மேல் ஆர்வமுள்ள மக்கள் இந்த தளங்களை வாடகைக்கு எடுத்து விளையாடும் வசதியையும் வழங்குகிறது.

அதே நேரம் தேசிய அளவிலான சாம்பியன்களைக் கொண்ட பயிற்சியாளர் குழு மூலம் இங்கு உயர்தரப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



மத்திய விளையாட்டுத்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் மை பாரத் கேந்திரா ஈரோடு இதன் மூலம் மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டி தமிழ்நாடு விளையாட்டு மைதானம் ஈரோட்டில் நடைபெற்றது இதில் ஆண்கள் பிரிவில் கையுந்து பந்து, பெண்கள் பிரிவில் கயிறு இழுக்கும் போட்டி,சிலம்பம்,100 மீட்டர் ஓட்டம் நடைபெற்றது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள். கோபி,மொடக்குறிச்சி,சத்தியமங்கலம் சென்னிமலை,ஈரோடு என 5 தொகுதி அளவில் வெற்றி பெற்று மாவட்ட அளவில் நடைபெறும் இந்த போட்டியில் கலந்து கொண்டனர் இந்த போட்டியை தொடங்கிவைத்தவர் மைபரத் கேந்திரா ஈரோடு மகேஷ்குமார் பட்டயக்கணக்காளர் தொடங்கிவைத்தார். நிறைவுவிழாவில் வெற்றி பெற்றவர்களுக்கு, டீசர்ட் சான்றிதழ், டிராபி, வழங்கப்பட்டது





நம் இந்திய நாட்டின் விடுதலைக்காக போராடி உயிர்நீத்த ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் பிறந்த கொடிகாத்த தியாகி குமரன் 94ஆம் ஆண்டின் நினைவு நாளில் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் உள்ள தியாகி குமரன் சாலையில் அமைந்துள்ள தியாகி குமரன் திருவுருவ சிலைக்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாநில துணைத் தலைவரும் ,ஈரோடு மாவட்டத் தலைவருமான N.நந்தகோபால் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் மாநில கொள்கை பரப்புச்செயலாளர் வைரம், மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பிரதாப், விக்ரம், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் ஸ்ரீதர், மாநில பொதுக்குழு உறுப்பினர் சீனிவாசன், மாவட்ட இணைச் செயலாளர்கள் சக்திவேல், தனசேகர்,SIB நிர்வாகிகள் ஈரோடு காசிபாளையம் கிளை, P.மேட்டுபாளையம் கிளை, K.மேட்டுப்பாளையம் கிளை, கருங்கல்பாளையம் கிளை, சூரம்பட்டிவலசு கிளை, ஈரோடுமேற்குகிளை,கோபிகாசிபாளையம்கிளை,நிர்வாகிகள்,உறுப்பினர்கள்,இளைஞரணியினர்மற்றும்அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு தியாகி குமரனுக்கு வீரவணக்கம் செலுத்தினர் .முன்னதாக ஈரோட்டின் மண்ணின் மைந்தர்தியாகி குமரனுக்கு மரியாதை செலுத்தும் விதமாக ஈரோடு இரயில்நிலையத்தைதியாகி குமரன்இரயில்நிலையம் என்று பெயர் வைக்க வேண்டும் என்று மத்திய அரசிடம் ஈரோடு மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பாக கோரிக்கை வைக்கப்பட்டது.





சுதந்திரப் போராட்டத் தியாகி கொடிகாத்த குமரன் 94 வது நினைவு நாளான நேற்று (1112026) ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி தொகுதி சிவகிரியில் உள்ள அவரது சிலைக்கு புதிய திராவிடர் கழகத்தின் நிறுவன தலைவரும்,தமிழ்நாடு அரசு சீர் மரபினர் நல வாரிய உறுப்பினர் கே.எஸ்.ராஜ்கவுண்டர், சமூக நீதி மக்கள் கட்சி மற்றும் மாவீரன் பொல்லான் பேரவை நிறுவனத் தலைவர் ஈரோடு வடிவேல்ராமன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.





சுதந்திர போராட்ட தியாகி கொடி காத்த குமரன் 94 வது நினைவு தினத்தை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமிஈரோடுமாநகர்பெரியார்நகர்பகுதியில்அமைந்துள்ளமுகாம்அலுவலகத்தில்அலங்கரித்துவைக்கப்பட்டுள்ள தியாகி குமரன் திரு உருவப்படத்திற்கு அமைச்சர் சு.முத்துசாமி மலர் தூவி மரியாதை செய்தார்.அதனை தொடர்ந்து ஈரோடு மாநகர் சம்பத் நகரில் அமைந்துள்ள தியாகி குமரன் முழு உருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்தார்.இந்நிகழ்ச்சியில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ்,ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சியின் துணை மேயர் வே.செல்வராஜ், மாநகரக் கழக செயலாளர் மு. சுப்ரமணியம், மண்டல குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக மாநில ,மாவட்ட, மாநகர கழக ,பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள் ,கழக சார்பு அணியினர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாநகராட்சி 10வது வார்டில் பொதுமக்கள் சார்பில் உற்சாகமான சமத்துவ பொங்கல் கொண்டாடப்பட்டது



ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட 10-வது வார்டு பகுதிகளில் அமைந்துள்ள திருவள்ளுவர் நகர் மற்றும் அம்மன் நகர் ஆகிய குடியிருப்பு பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து, தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழாவான சமத்துவ பொங்கல் விழாவினை மிகச் சிறப்பாகக் கொண்டாடினர்.இந்தவிழாவிற்கு மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் கொங்கு குமரவேல் தலைமை தாங்கினார். விழாவின் தொடக்கமாக, சாதி, மத பேதமின்றி அனைத்துத்தரப்புமக்களும் ஒருசேரக் கூடி, புதுப்பானையில் பச்சரிசி, வெல்லம் மற்றும் நெய் சேர்த்து பொங்கலிட்டு 'பொங்கலோ பொங்கல்' என முழக்கமிட்டு இயற்கையை வழிபட்டனர்.

மாமன்ற உறுப்பினர் குமரவேல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், இப்பகுதி மக்களின் ஒற்றுமையை பறைசாற்றும் வகையில் பாரம்பரிய விளையாட்டுகள் மற்றும்கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

ஒருவருக்கொருவர் பொங்கல் இனிப்புகளைப் பகிர்ந்து கொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஒரே இடத்தில் கூடி கொண்டாடிய இந்த சமத்துவ பொங்கல் விழா, அக்கம் பக்கத்து குடியிருப்பு மக்களிடையே பெரும் நெகிழ்ச்சியையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது. விழாவிற்கான ஏற்பாடுகளை திருவள்ளுவர் நகர் மற்றும் அம்மன் நகர் குடியிருப்போர் நலச் சங்கநிர்வாகிகள் மற்றும்பெண்கள்,இளைஞர்கள் முன்னின்று செய்திருந்தனர்.

# தியாகி குமரனின் 94வது நினைவு நாள்: ஈரோட்டில் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் புகழஞ்சலி நிகழ்வு

ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் தியாகி குமரன்94-ஆவதுநாளை முன்னிட்டு ஈரோடு மாநகர் சம்பத் நகர் தியாகி குமரன் சாலையில் அமைந்துள்ள அவரது சிலைக்கு

ஈரோடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி நெசவாளர் அணி தலைவர் சி. மாரிமுத்து தலைமையில் ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் டி. திருச்செல்வம் தியாகி குமரன் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட தலைவர் ஈ.பி.ரவி, துணை தலைவர் பா.ராஜேஷ் ராஜப்பா, மண்டலத் தலைவர்கள் ஆன மாமரத்து பாளையம் எஸ்.கோபி, ஆர். விஜயபாஸ்கர், சூரம்பட்டி சாம்ராட் அசோக், எச்.எம். ஜாபர் சாதிக், தமிழ்நாடு தொழிலாளர் காங்கிரஸ் (டிசிடியூ) மாநில துணைத்தலைவர் குளம் எம்.ராஜேந்திரன்,சூரம்பட்டி விஜயகுமார், ராஜாஜிபுரம் பி. குமரேசன்,பெரியார் நகர் சூரஜ், கனி ராவுத்தர் குளம் சபீர் அகமது, டீக்கடை லோகு மற்றும் பலர் திரளாக கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.



தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக மாநில பொதுச் செயலாளர் திரு எம். யுவராஜா அவர்கள் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆலமர தெரு பகுதியில் 11.1.2026 ஞாயிற்றுக்கிழமை காலை பொதுமக்களோடு சேர்ந்து பொங்கலை சிறப்பாக கொண்டாடினார். அது சமயம் சுமார் 500க்கும் மேற்பட்ட ஏழை எளிய மகளிர்க்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்த நிகழ்வில் தமிழ் மாநில காங்கிரஸ் மத்திய மாவட்ட இளைஞரணி துணைத் தலைவர் திரு மாயா வெங்கடேஷ் கொங்கு மண்டல மகளிர் அணி பொதுச் செயலாளர் திருமதி காந்திமதி, மாவட்ட பொதுச் செயலாளர் திரு சஞ்சய் மற்றும் இளைஞர் அணியைச் சேர்ந்த ராஜராஜன் வேலுச்சாமி அருண்குமார் தனசேகர் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.




ஈரோடு மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் A.சுஜாதா தலைமையில் [10.01.2025] அன்று ஈரோடு மாவட்டக் காவல் அலுவலகத்தில் காவல்துறை மற்றும் அரசு வழக்கறிஞர் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.